CC.No.267/2022 (JM.No.II, DHARMAPURI)

17.06.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW-7 : திருமதி.சர்மிளாபானு (காவல் ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தொப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 29.02.2021 காலை 11.00 மணிக்கு தினேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவர் குற்ற எண்.410/2021 சட்டபிரிவு 279, 304எ வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பெற்று கொண்டு, சம்பவ இடமான சோழியானூர் தொப்பையாறு சாலை, கோணமடுவு விநாயகர் கோவில் அருகே 11.30 மணிக்கு ஆஜராகி சாட்சிகள் சரவணன், அர்ஜீனன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்னர் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்தவமனைக்கு வந்து அடைந்த 14.00 – 15.30 மணி வரை சவக்கிடங்கில் வைக்கப்பட்டு இருந்த மாணிக்கம் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் தினேஷ், சிவகுமார், சங்கர், சக்திவேல், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஜிலான்பாஷா வசம் ஒப்புவித்தேன். பின்னர் அன்றையதினமே நிலையம் வந்தடைந்து 17.00 மணிக்கு எதிரி மாதையன் மீது என்பவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன். விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் ராஜேந்திரன், பிரபு, கோவிந்தராஜ், தங்கவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய லாரி TN-52 V-8490 வாகனத்தை மோட்டார் வானக ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 25.12.2021 தேதி பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர் தண்டர்சீப் என்பவரை விசாரித்தும், விபத்துக்குள்ளான வாகனத்திற்கு ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜ்குமார் என்பவரை விசாரித்தும், பிரேத விசாரணையின்போது உடன் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஜிலான்பாஷா என்பவரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவரையும் விசாரித்தும், தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 25.12.2021 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் இ.த.ச பிரிவு 279, 304 எ எதிரி மாதையன் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5, பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6, TN-52 V-8490 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

புகாரில் 21.09.2021 அன்று விபத்து நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றாலும், அந்த தேதியில் புகார் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். 21.09.2021 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தகவல் எதுவும் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் அருகில் குறிப்பிட்டுள்ள

நபர்களை நான் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. 22.09.2021 அன்று விபத்தில் காயம்பட்ட மாணிக்கம் இறந்தபிறகு தான் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வந்து முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறு நாங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 3 நாட்கள் காலதாமதமாக தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 6 நாட்கள் காலதாமதமாக தான் முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை என்றாலும், சரியாக புலன் விசாரணை செய்யாமல் நின்று கொண்டிருந்த லாரியில் ஏறும்போது தவறி விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக அளிக்கப்பட்ட புகாரை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.17 17:20:34 +0530